பெரியதபாற் கந்தோரில் புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை

மலர் : 6 | 1963, சனவரி 8 ந் திகதி | இதழ் : 43

யாழ்ப்பாணத்தில்

# உணவு, வர்த்தக அமைச்சர் நிகழ்த்திய உரை

பருத்தித்துறையின் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை நான் இப்போது திறந்து வைக்கிறேன். எனக்கு இந்த ஸ்தாபனத்தை திறந்து வைக்குமாறு அழைப்பு விடுத்தமைக்காக பட்டினசபைத் தலைவர் திரு. நடராஜாவுக்கும் யாழ்ப்பாணத் தொகுதி ஜனப் பிரதிநிதி திரு. துரையப்பாவுக்கும் இந்த ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டுள்ள இதர பிரமுகர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொழும்பிலிருந்து இன்று காலையில் வந்த எனது நண்பரும் கல்வி அமைச்சருமான திரு. பதியுதீன் முகமதும், நானும் மற்றவர்களும் காலையில் விமான நிலையத்தில் எங்களுக்கு அளிக்கப்பட்ட அன்பான வரவேற்பைக் கண்டு உவகையுற்றோம். மழையாக இருந்தும் இத்தனை பெரும் தொகையானோர் எங்களைக் கௌரவிப்பதற்காக வந்துள்ளமையைக் கண்டும் மகிழ்ச்சியடைகிறோம். எங்களுக்கு இத்தகைய உன்னத வரவேற்பு அளித்ததுடன், ஊர்வலமாக அழைத்துச் சென்று அடுக்கடுக்காக மாலைகள் அணிவித்தமையையும், இவ்வரசாங்கம் ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டிக் கௌரவிப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு எனவும் கருதுகிறோம். நாங்கள் மழையையும் அழைத்து வந்தமைக்காக வருந்துகிறேன். இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் இச்சிறிய கட்டடத்திற்குள் வர முடியாத நிலையிலுள்ளனர். குறிப்பாக, சமஷ்டிக் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான எனது நண்பர்கள் அருகில் வரமுடியாது, வீதியில் நின்று நனைகிறார்கள் என்பதையிட்டும் வருத்தமடைகிறேன். அவர்கள் என்னை எனது காரியாலயத்தில் வந்து பார்த்து, சில பிரதேசங்களுக்கு உதவி பெறுவதும், சொந்த உதவி பெறுவதும் வழக்கம். ஆயினும், அவர்களுக்காக வருந்துகிறேன். ஏனெனில், பருத்தித்துறையில் அவர்களுக்கும் எனக்கும் இடையில் சில பொது மக்கள் நிற்பதாகத் தோன்றுவதனால், என்னை அடைவதற்கு அவர்களுக்கு இடமில்லை. எனக்குத் தரப்படும் மலர்களில் சில மழையில் நின்று நனையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் அவர்களுக்கு ஒரு மன ஆறுதலாக இருக்கும். வேண்டியவருக்கும், வேண்டாதாருக்கும் ஒளி பரப்பும் சூரிய, சந்திரனைப் போன்றதே எங்கள் அரசாங்கமும். குறிப்பாக, கூட்டுறவுப் பகுதி, புரியும் சேவை மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும். கடந்த சில மாதங்களாக இந்த நன்மையைச் செய்து தரும்படி பட்டின சபைத் தலைவரும், பட்டினசபையும், யாழ்ப்பாண ஜனப் பிரதிநிதி திரு. அல்பிறட் துரையப்பாவும் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததாகக் கூறிப் பாராட்டிய கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத் தலைவரின் வார்த்தைகளை அப்படியே நான் ஆமோதிக்கிறேன்.

ஜனப் பிரதிநிதிகள் எதிர்க்கட்சியினராக இருந்தாலும், அரசாங்கக் கட்சியினராக இருந்தாலும் சரி மக்களுக்கான நன்மைகளைத் தொகுதிகள் அனைத்திற்கும் வழங்குவதே எங்கள் அரசாங்கத்தின் கொள்கை. நாட்டின் இந்தப் பாகத்தில், வசித்தாலும் சரியே, அந்தப் பாகத்தில் வசித்தாலும் சரியே,

(4 ம் பக்கம் பார்க்க)

# தேசிய சேவை மன்றம் மசோதா தயார்

பிரதமரின் பதில் பாராளுமன்றக் காரியதரிசியாகவும், பதில் பாதுகாப்பு அமைச்சராகவும் கடமையாற்றும் திரு. சி. பி. டி சில்வா, தேசிய சேவை மன்றத்தை நிறுவி, செயற்படுத்த வகை செய்யும் மசோதா ஒன்றை ஜனவரி 8 ஆம் திகதி ஜனப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்தார்.

இம்மன்றம் நிறுவப்படுவதற்கான நோக்கங்கள் வருமாறு :—

(i) பொதுவாக இலங்கையில் உள்ள மக்களிடையேயும், குறிப்பாக இலங்கையின் இளைஞர்களிடையேயும் தேசிய உணர்வையும், கட்டுப்பாட்டையும், மெய்வருந்தி உழைப்பதில் உள்ள கண்ணியத்தை வளர்த்தலும், சமூக, பொருளாதார பிரச்சினைகளை அறிந்திருக்கச் செய்தலும், பாடசாலைப் பிள்ளைகளுக்கு வேலை செய்து அனுபவம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தலும்.

(ii) தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தொண்டர் சேவை மார்க்கங்களின் மூலம் வர்க்க, ஜாதி, மத பேதங்களின்றி இலங்கை மக்கள் தீவிரமாகவும் தொடர்ந்தும் பங்குபற்றச் செய்தல்.

(iii) தொண்டு அடிப்படையில் தேசிய சேவைத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுதல். குறிப்பாக, சமூக நலன், சமூக புனருத்தாரணம், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி போன்ற குறிக்கோள்களைக் கொண்ட திட்டங்களாக அவை இருக்கும்.

(iv) பொதுமக்கள் பாவனைச் சாதனங்கள், சமூக நலன், சமூக புனருத்தாரணம், பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான தேசிய வேலைத் திட்டங்களை நிறைவேற்றுதற்கு மக்கள் குழுக்களுக்கு ஆதரவு நல்குதல்.

(v) தேசிய அபிவிருத்தி சம்பந்தமான கொள்கைகளைத் துரிதமாகச் செயற்படுத்துவதற்கு அரசாங்க இலாக்காக்கள் மக்களின் பொது அல்லது தனிப்பட்ட மன்றங்கள் ஆகியவற்றின் சேவைகளையும், செயல்களையும் ஒருங்கிணைத்தல்.

(vi) தேசிய சேவைத் திட்டங்களுக்குத் தொண்டு புரியும் அடிப்படையில் முன்வரும் நபர்களை இலங்கைக்கும் இதர நாடுகளுக்குமிடையில் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலம் நாடுகளிடையே நல்லெண்ணத்தையும், பரஸ்பர நல்லுறவையும் வளர்த்தல்.

# ஆசிரியர் பயிற்சித்திட்டம்

## யூனெஸ்கோ நிபுணர் இலங்கை வருவார்

இந்நாட்டில் நிலவிவரும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பற்றுக் குறையைச் சமாளிப்பதற்காக ஆசிரியர்களுக்கான சேவையிலிருந்து கொண்டே பெறும் பயிற்சித்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு யூனெஸ்கோ வல்லுனரொருவரின் சேவைகளைப் பெற்றிருக்கிறது, கல்விப் பகுதி.

பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சி வசதிகளை விஸ்தரிப்பதற்கான ஒழுங்குகளையும் செய்துவருகிறது, இப்பகுதி. இப்பகுதியின் பயிற்சித்திட்டத்தின்கீழ் ஆசிரிய பயிற்சிக்காகச் சேர்க்கப்படுவோரின் தொகை 1955 இல் 2,480 ஆக இருந்து 1,961 இல் 2,626 ஆக ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு மார்ச் மாதத்தில் புதியதொரு ஆசிரிய கலாசாலை வடமத்திய மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

தேசிய கல்வி முறைமையின் சகல அம்சங்களிலும் பயன்படுவதற்காக ஆசிரிய கலாசாலைகளின் பாட விதானங்கள் கூட உள்ளபடியாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளதோடு ஆசிரிய பயிற்சியும் புனருருவாக்கப்பட்டுள்ளது.

முழுச் சம்பளத்துடன் படிப்பதற்கான லீவுத்திட்டம் கணிசமான அளவுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. படிப்பதற்காக லீவில் செல்லும் ஆசிரியர்களின் தொகை ஆண்டுக்கு 100 இலிருந்து 800 ஆக அதிகரிக்கப்பட்டது. (முழுச் சம்பளத்துடன் 600 பேரும் சம்பளமின்றி 200 பேரும் படிப்பதற்காக லீவில் சென்றனர்). ஆசிரிய கலாசாலைகளிலுள்ள ஆசிரியர்களில் சுமார் 5,264 பேர் படிப்பு லீவில் இருந்து படிக்கிறார்கள். இதனால் அவர்கள் கூடிய தகைமைகளையும் திறமைகளையும் பெறக்கூடும். இவை அவர்களைத் தலைசிறந்த ஆசிரியர்களாக்கும். இத்திட்டத்தினால் சுயபாஷை ஆசிரியர்களே பெரிதும் பயனடைகிறார்கள்.

இவற்றைத்தவிர, ஆசிரியர்களினதும் ஆசிரியப் போதனாசிரியர்களினதும் தரத்தை விருத்தி செய்வதற்கு சர்வதேச புலமைப் பரிசில்களும் இணையுரிமைப் பரிசுகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

# பரீட்சைப் பகுதி

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை, டிசெம்பர்—1962**

1962 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடந்த மேற்படி பரீட்சைக்குரிய பௌதிகவியல், இரசாயனவியல் வினாத்தாள்கள் பயன் படாதவாறு இரத்து செய்யப்படுகின்றன. 1962 ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இவ்விரு பாடங்களுக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் 1963 ம் ஆண்டு மார்ச் மாதம் 9 ந் திகதி சனிக்கிழமை இப்பாடங்களில் ஒரு புதிய பரீட்சை நடாத்தப்படும்.

1962 ம் ஆண்டு டிசெம்பர் மாதப் பரீட்சைக்கு பாடசாலைப் பரீட்சார்த்திகளாகத் தோற்றிய மாணவர்களின் பிரவேச பத்திரங்கள் 1963 ம் ஆண்டு மார்ச் மாதம் 2 ம் திகதிவரையில் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குப் பின் பாடசாலையை விட்டு நீங்கிய பரீட்சார்த்திகள் தமது பிரவேச பத்திரங்களை பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். பாடசாலையிலிருந்து நீங்கிய பரீட்சார்த்திகளின் பிரவேச பத்திரங்களை அவர்களுக்குத் தாமதமின்றியும், கட்டாயமாகவும் ஒப்புவித்தற்கான எல்லா ஒழுங்குகளையும் தலைமை ஆசிரியர்கள் செய்தல்வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பிரவேச சீட்டுகள் அவர்களின் விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

1962 ம் ஆண்டு டிசெம்பர் மாதப் பரீட்சை நடந்த இடத்திலேயே இப்பரீட்சையும் நடாத்த வேண்டிய அவசியமில்லையெனப் பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். தமக்கு அறிவிக்கப்படும் இடத்திலேயே புதிய பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எக்காரணத்தையிட்டும் பரீட்சை நிலையத்தைப் பற்றிய மாற்றங்கள் அனுமதிக்கப்படமாட்டா.

# உணவு உற்பத்தி இயக்கம்


கௌரவ சி. பி. டீ சில்வா,

விவசாய, காணி, நீர்ப்பாசன மந்திரி


உள்நாட்டு உணவு உற்பத்தியைப் பெருக்குதல் எவ்வளவு அத்தியாவசியம் என்பதை அண்மையில் நடந்த சம்பவங்கள் பொது மக்களின் கவனத்திற்கு எடுத்துக் காட்டுகின்றன. இப்பெருக்கத்தால் எமது நாடு உழைக்கும் அந்நிய நாணயத்தைச் சேமிக்கவும் உள்நாட்டுப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் முடியும். இவ்விரு இலட்சியங்களும் சடுதியாகவே முக்கியத்துவம் அடைந்தன என்று கூற இடமில்லை. எந்தச் சூழ்நிலையிலும் இவை விரும்பத்தக்க நோக்கங்களே. ஆயினும் தற்போதைய பொருளாதார அமைப்பில் அதிக உணவு உற்பத்தி இரு விசேஷ காரணங்களுக்காக உண்மையாகவே அத்தியாவசியமாகிவிட்டது.

முதலாவதாக எமது நாட்டின் குடிசனத் தொகை உயர்ந்த விகிதமாக வருடா வருடம் அதிகரித்து வருகின்றது. உலகம் முழுவதிலுமே இலங்கையின் தற்போதைய அதிகரிப்பு விகிதமாகிய 2·9 சத விகிதம் மிகக் கூடியதொன்றெனலாம். இதன்படி எமது சனத்தொகை ஒவ்வொரு நாலு வருஷத்துக்கும் 10 இலட்சம் வீதம் அதிகரிக்கும். இந்நூற்றாண்டு முடிவதற்கிடையில் சனத்தொகை இரட்டித்து இரண்டு கோடியாகிவிடும். இன்று நாம் 70 கோடி ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கின்றோமானால் நாற்பது வருடங்களில் இதற்கு இரட்டிப்பு மடங்கான இறக்குமதி செய்தல் வேண்டும். உள்நாட்டுப் பொருள் உற்பத்தி ஸ்தம்பித்துவிட்டால் இந்த நிலைமையில் தற்போதைய வாழ்க்கைத் தரத்தை மாத்திரம் தொடர்ந்து பாதுகாக்கவே முடியும்.

### சனத்தொகை உயரும் வேகம்

இரண்டாவதாக நமது சாதாரண வெளிநாட்டு ஏற்றுமதிப் பொருட்கள் உணவு இறக்குமதி செய்ய எந்த அளவுக்குக் கூடுதலான அந்நிய நாணய உழைப்பை உண்டுபண்ண முடியுமென்பதே. கடந்த இரண்டு வருஷங்களாக ஏற்றுமதிப் பொருட்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. 1961 ம் ஆண்டில் ஏற்றுமதிப் பொருட்களின் பெறுமதி 173 கோடி. இதில் 40 சத விகிதம் ஆகிய பணத்தொகையை இந் நாட்டின் ஒரு கோடி 5 இலட்சம் சனத்தின் உணவுத் தேவைகளைப் பூர்த்தியாக்குவதற்கே உணவு இறக்குமதியில் செலவிட்டுள்ளோம். வருங்காலத்தில் சனத்தொகையின் அதிகரிப்பிற்கேற்ப ஏற்றுமதிப் பொருட்களின் பெறுமதி அதிகரிக்க இடமுண்டா என்ற கேள்வி எழுகின்றது. எங்கள் பிரதான ஏற்றுமதிப் பொருட்களாகிய தேயிலை, ரப்பர், தெங்குப் பொருட்களின் உற்பத்திச் செலவு, கூலி மலிந்த மற்ற நாடுகளிலுள்ள உற்பத்திச் செலவிலும் பார்க்க அதிகமாகிவிட்டது. வருங்காலத்தில் உற்பத்திச் செலவு இன்னும் கூடலாம். அப்படியாயின் குறைந்த செலவில் உற்பத்தி செய்யும் பிறநாடுகளுடன் நம் நாட்டுப் பொருட்கள் உலகச் சந்தையில் போட்டியிட முடியுமா ? மேலும் செயற்கைப் பொருட்கள் பிறநாடுகளில் மிகக் குறைந்த செலவில் உண்டாக்கப்படுகின்றன. அப்படியாயின் நமது நிலைமை என்ன ?

இத்தேசத்தவர்களாகிய நமக்கு இனிச் செய்ய வேண்டியது தெள்ளத்தெளிவாகிவிட்டது. இது யாதெனில், உணவுப் பொருட்களில் சுய தேவைப் பூர்த்தி அடைதலே. எல்லாப் பொருட்களிலும் சுயதேவைப் பூர்த்தி அடைய முடியாவிட்டாலும், உள்நாட்டில் சிக்கனமாக உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களைப் பொறுத்தவரையாவது இறக்குமதியில் தங்கியிருக்கக் கூடாது. உண்மையில் இதுவே எம்முடைய வாழ்க்கை முறையின் அடிப்படைக் கொள்கையாக விருக்க வேண்டும். அல்லாவிடில் தற்போதைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ அல்லது நீடிக்கவோ முடியாது.

### இறக்குமதிச் செலவுகள்

1961 ம் ஆண்டில் எமது உணவு இறக்குமதியை உற்றுப் பார்த்தால், 170·3 கோடி ரூபாய் பெறுமதியான முழு இறக்குமதியில் 60·6 கோடி ரூபாய் பின்வருமாறு செலவிடப்பட்டது :—

| பொருள் | | விலை |
|---|---|---|
| 1. அரிசி | .. | ரூ. 21·7 கோடி |
| 2. மா | .. | ரூ 7·8 கோடி |
| 3. சீனி | .. | ரூ. 7·8 கோடி |
| 4. பால், பால் பொருள் | | ரூ. 6·5 கோடி |
| 5. இறைச்சி, மீன், முட்டை | .. | ரூ. 7·2 கோடி |
| 6. கடலை, கறிச்சாமான்கள் | .. | ரூ. 10·4 கோடி |
| மொத்தம் | .. | ரூ. 60·6 கோடி |

மேலே கொடுக்கப்பட்ட உணவு இறக்குமதியின் அட்டவணை எமது உணவு உற்பத்தி இயக்கம் எந்த வகையில் செல்ல வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகின்றது. எங்களின் அந்நிய நாட்டுச் செலவில் பெருந் தொகையான பணம் அரிசி இறக்குமதிக்காகவே செலவிடப்படுகின்றது. இதனால் உள்நாட்டு நெல் விளைவு முன்னேறவில்லையென்றுவது அல்லது அரிசி இறக்குமதியின் பெயரில் வெளிநாட்டு நாணயச் செலவு அதிகரித்துள்ளதென்றுவது கருதலாகாது. உண்மையிலே கடந்த ஐந்து வருஷங்களுள் நெல் விளைவில் அடைந்த முன்னேற்றம் வேறெந்தப் பயிர்ச் செய்கையிலும் நாம் அடையவில்லை. உள்நாட்டு அரிசி உற்பத்தி 1957 ல் 4,50,000 தொன்னிலிருந்து 1961 ல் 6,20,000 தொன் வரை அதாவது 40 சத வீதம் அளவிற்கு அதிகரித்துள்ளது. இதே காலத்தில் அரிசி இறக்குமதி 5,15,000 தொன்னிலிருந்து 4,50,000 தொன்னுக்குக் குறைந்துள்ளது. இதுவும் 15 இலட்சம் சனத்தொகையில் கூடிய காலத்தில், உள்நாட்டு உற்பத்தி 1961 ம் ஆண்டில் நாட்டின் முழுத் தேவைகளின் 57 சத விகிதத்திற்குப் போதுமானதாயிருந்தது. ஆயினும் நாங்கள் இறக்குமதி செய்யும் அரிசித் தொகையும் அதன் பெறுமதியும் அபாயகரமான நிலைக்கு உயர்ந்துள்ளன. நான் முன்னர் கூறியவண்ணம் சனத் தொகை அதிகரிப்பும் உலகச் சந்தையில் எங்கள் ஏற்றுமதியின் விலை இறக்கமுமே இதற்குக் காரணங்களாம்.

### உள்நாட்டில் நெல் உற்பத்தி

எங்கள் இறக்குமதியின் பெறுமதியில் போதிய அளவு சேமிப்பை உண்டுபண்ணத் துரிதமான வழி யாதெனில் உள்நாட்டு நெல் உற்பத்தியின் தொகையையும் தனி ஏக்கரின் விளைவையும் அதிகரித்து, இறக்குமதி தேவைப்படாத நிலையை அடைதலே, இந்த அளவிற்கு உற்பத்திப் பெருக்கம் அடுத்த சில வருஷங்களில் செய்தல் எமது நாட்டவருக்கு முடியுமான காரியம் என்பது முழு நம்பிக்கை. இவ்விஷயத்தில் ஜப்பானிய தேசம் போன்ற நாடுகளின் அனுபவத்தால் நாம் பலனடையலாம். ஜப்பானில் ஓர் ஏக்கரின் விளைவு இலங்கையின் விளைவிலும் பார்க்க இரண்டரை மடங்கு அதிகமானது. அடுத்துவரும் காலத்தில் பின்வரும் முறைகளைக் கையாண்டால் விளைவை இலகுவாக இருமடங்காக்கலாம். அதிக உரம் பாவித்தல், சிறந்த விதை நெல் பாவித்தல், திருத்தமான சாகுபடி முறைகளை அனுஷ்டித்தல், நாற்று நடுதல், வரிசையில் விதைத்தல், களை பிடுங்குதல், நோய்பூச்சி மட்டுப்படுத்தும் முறைகளைக் கையாளுதல், போதிய அளவு நீர்ப்பாசனம் செய்தல், அதிக வெள்ளத்தைக் கடத்துதல் முதலியனவாம்.

அரிசியை விட 1961 ல் 10·4 கோடி ரூபா பெறுமதியான ஏனைய உணவுப் பொருட்கள் (கடலை, பருப்பு வகை, சரக்குவகை) இறக்குமதி செய்துள்ளோம். இவற்றில் அநேகம் இலங்கையிலே வெற்றிகரமாகப் பயிர்செய்யமுடியும். சமீப காலத்தில் அரிசி இறக்குமதி ஓர் அளவிற்குக் குறைந்த போதிலும் ஏனைய பொருட்களின் இறக்குமதி தொடர்ந்து அதிகரித்திருக்கின்றது. 1956 ல் இருந்து 1961 ம் ஆண்டுவரையுள்ள ஐந்து வருஷ காலத்தில் இவ்விறக்குமதி 40 சத வீதம் கூடுதல் அடைந்துள்ளது. செத்தல் மிளகாயின் இறக்குமதி 23 கோடி ரூபாவிலிருந்து 33 கோடிக்கு உயர்ந்துள்ளது. பம்பாய் வெங்காயம் 13 கோடி ரூபாவில் இருந்து 21 கோடிக்கும் உருளைக் கிழங்கு 13 கோடி ரூபாவில் இருந்து 2 கோடிக்கும் அதிகரித்துள்ளது. விலை வித்தியாசங்களைப் புறக்கணித்து நோக்குமிடத்து. இறக்குமதியின் உயர்வு விகிதம் சனத்தொகையின் அதிகரிப்பிலும் பார்க்கக் கூடுதலாகக் காணப்படுகிறது. இதனால் ஏனைய உணவுப் பொருட்கள் உற்பத்தி நெல் விளைவைப் போல முன்னேற்றம் அடையாததுமன்றி இவ்விறக்குமதிப் பொருட்களை முன்னையிலும் பார்க்கக் கூடிய விகிதம் நாம் உபயோகித்து வருகின்றோம் என்பதும் வெளிப்படையாகும். ஆகவே, இத்துறையில் எமது முயற்சியை வருகின்ற மாதங்களில் கூடுதலாகச் செலுத்தவேண்டும். இலங்கை விவசாய நிர்வாகத்தின் முதல் நோக்கம் அடுத்துவரும் இரண்டு மூன்று வருஷங்களில் ஏனைய உணவுப் பொருட்களின் இறக்குமதியைக் கணிசமான அளவிற்குக் குறைத்தலேயாம்.

### விளைவைப் பெருக்க ஒரு குறிக்கோள்

இவற்றுள் சில பொருட்கள் உதாரணமாக மிளகாயை நாட்டின் எல்லாப் பகுதியிலும் பயிர் செய்யக்கூடும். உருளைக் கிழங்கு போன்ற ஏனையவற்றைச் சில பாகங்களில் மாத்திரம் வெற்றிகரமாகப் பயிர் செய்யலாம். அரசாங்க விவசாயப் பகுதி நாட்டின் எவ்வெப்பாகங்களில் வெவ்வேறு உணவுப் பயிர்கள் நன்கு விளைவிக்கலாம் என்பது பற்றி விவசாயிகளுக்கு அறிவிக்கும். இவ்வறிவிப்பை உபயோகித்து, அவ்வப்பிரதேசங்களில் உள்ள கமக்காரர்களின் ஆலோசனையோடு ஒவ்வொரு பகுதியிலும் செய்ய வேண்டிய பயிர்களுக்கு நிதானமான திட்டம் அமைக்க வேண்டும். இத்திட்டத்தில் எவ்வளவு தொகையான விளைவு ஒவ்வொரு பகுதியிலும் உற்பத்தி செய்யப்படும் என்ற குறிக்கோளும் நிர்ணயிக்க வேண்டும். இது மாதிரியான உணவு உற்பத்தி இயக்கத்திற்குப் பொது சன ஆதரவு பெறுவதற்காக விவசாயப் பகுதியின் உத்தியோகத்தர்கள் பிரசாரம் செய்யவும் இவ்வேலைக்கு முதன்மை கொடுக்கவும் பணிக்கப்பட்டுள்ளனர்.

### பொது மக்களின் ஒத்துழைப்பு

இவற்றைவிட, உள்நாட்டில் உற்பத்தியாகும் பல வேறு உணவுப் பொருட்களை இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாகப் பாவித்துக் கொள்ளலாம். உதாரணமாக மரவள்ளி, வத்தாளை, கருணை முதலிய கிழங்கு வகைகள் உருளைக் கிழங்கிற்குப் பதிலாகப் பாவிக்கலாம். மேலும் கோதுமை மா அல்லது அரிசி மாவில் வழக்கமாய்ச் செய்யும் பலகாரத்திற்குப் பதிலாகக் காலையில் உணவிற்கு இக்கிழங்குவகைகளைப் பாவிக்கலாம். ஆகவே இந்த இயக்கம் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவது மாத்திரமன்றி இது போன்ற பொருட்களை வீட்டுப் பாவனையிலும் விற்பனை செய்விப்பதற்கும் போதிய அளவில் உபயோகிக்க வேண்டும். இதனால் அரிசி, மா, உருளைக் கிழங்கு ஆகியவற்றின் இறக்குமதியைக் கணிசமான அளவிற்குக் குறைக்கலாம்.

இந்த உணவு உற்பத்தி வெற்றி அடையும் பொருட்டு நாட்டிலுள்ள மக்கள் எல்லோரினதும் முயற்சியையும் உற்சாகத்தையும் சேர்த்துக்கொள்ளுதல் அவசியம். ஏனெனில் எங்கள் பொருளாதார மீட்சிக்கு இத்துறையில் வெற்றி காணுதல் மிக முக்கியமானது. பொதுசனங்களைப் பங்குபற்றச் செய்வதாலே எங்கள் நோக்கம் நிறைவேறும். இவ்வியக்கம் தனி அரசாங்க முயற்சியாக மாத்திரம் இருந்தால் போதாது. அப்படி இருக்கவும் ஒண்ணாது. பொது சனங்களின் உண்மைக் கிளர்ச்சியாகவும் எல்லாப் பகுதியினரும் முழுமனதாக ஒத்துழைக்கும் இயக்கமாகவும் இருக்க வேண்டும். இவ்வியக்கம் நாட்டின் ஒவ்வொரு கிராமத்தையும் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டையும் ஊக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் எங்களால் இயன்ற அளவு எங்களுக்குத் தேவையான உணவில் ஒரு பகுதியாவது உற்பத்தி செய்ய முடியும். அதைக் கட்டாயம் செய்யவும் வேண்டும். அதிக உணவு உற்பத்தியே தற்போதைய அவசியத் தேவை. இத்தேசத்தவர்களாகிய நாம் இந்த விஷயத்தில் பராமுகமாயிருக்கலாகாது. பராமுகம் அதிக நஷ்டத்தை விளைவிக்கக் கூடுமாதலால், நாம் இவ்வாய்ப்பைத் தவறவிடாது முயற்சி செய்து பயனடைவோமாக !

(கல்லோயா செய்தி)

# குட்டரோகம் பற்றிய உண்மைகள்

**காரண கர்த்தா**

மைக்கோபக்ரீறியம் லெப்றே என்னும் குட்டரோகக் கிருமிகளினுல் உண்டாகும் இந்நோய் எளிதில் தொற்றக்கூடியதல்ல. இது மனிதருக்கே உண்டாகிறது. டியூபர் கின் பசிலஸ் என்னும் கயரோகக் கிருமிகளைப் போலவே குட்டரோகக்கிருமிகள் தோற்றத்தில் ஒத்திருந்தாலும் இவையின் சக்தி அதிகமில்லாத காரணத்தால் எளிதில் தொற்றும் தன்மையற்றது. எனினும் கயரோகத்தைப் போலல்லாது இது கொடூரமான இயற்கை படைத்தது.

நோர்வே தேசத்தவரும் குட்டரோக வைத்திய நிபுணருமான ஹான்சன் என்பவர் இந்நோய்க் கிருமிகளை 1874 ஆம் ஆண்டில் கண்டுபிடித்ததன் பின்பு, இந்நோய் "ஹான்சன் நோய்" என்றும் அழைக்கப்படலாயிற்று.

**இலங்கையில் குட்டரோகத்தின் தோற்றமும் பரவலும்**

அரைவாசிக்கு அதிகமானோர் மேல் மாகாணத்திலும், மற்றும் முறையே தெற்கு, சப்ரகமுவ, கிழக்கு, மத்திய, வடக்கு ஆகிய மாகாணங்களிலும் குட்டரோகத்தாற் பீடிக்கப்பட்டவர்கள் காணப்பட்டார்கள்.

மேற்குக்கரையோரமாக, நீர்கொழும்பில் தொடங்கிக் கரையோரப் பிரதேசங்களில் முன்னேறி தென்கரையோரப் பகுதியில் மாத்தறை வரைக்கும், கிழக்குக் கரையோரப் பகுதியில் சிற்றுண்டிக் குடியிலிருந்து பொத்துவில் வரைக்கும் இந்நோய் முக்கியமாகக் காணப்படுகின்றது.

**பரவும் விதம்**

மனிதனுக்குத் தொற்றக்கூடிய ஏனைய தொற்றுநோய்களைப்போலக் குட்டரோகம் இலகுவில் தொற்றுது. சுலபமான காரணங்களுக்காக இந்நோய் இரண்டு பெரிய கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அ. நரம்பு (குட்ட) ரோகம்-தொற்றும் தன்மையற்றது (நொன் லெப்ரோமேரஸ்.)

ஆ. சரும (குட்ட) ரோகம்-தொற்றும் தன்மையுள்ளது (லெப்ரோமேரஸ்.)

ஒரு குட்டரோகியுடன் நெருங்கியும் நீண்ட நாட்களாகவும் தொடர்பு வைத்துக்கொள்ளுதல் இந்நோய் தொற்றுவதற்குப் பிரதானமான காரணமாக விளங்குகின்றது. அரிதான தொடர்பு ஆபத்தை விளைவிக்காது. சருமம், மூக்கினுள்ளேயுள்ள மெல்லிய சருமம், பரிணுகம நரம்பு முடிச்சு ஆகியவற்றினூடாகவே இக்கிருமிகள் உட்செல்லுகின்றன. தொற்றும் தன்மையற்ற குட்டரோகம் (நரம்பில் உண்டாவது) ஆபத்தை விளைவிக்கக்கூடியதல்ல. ஆகவே இந்நோயாளியொருவர் தகுதியான, சரியான சிகிச்சை பெறும் பட்சத்தில் இவர் தனது இல்லத்திலேயே தங்கித் தனது நாளாந்த வேலைகளைச் சாதாரணமாகச் செய்யலாம்.

இந்நோயாளியுடன் தொடர்பு கொண்டுள்ள ஒருவருக்கு இந்நோய் தொற்றுவது அவரது உடல் சக்தியைப் பொறுத்திருக்கிறது. ஊட்டக்குறைவும், ஜன நெருக்கடியும் இந்நோய் பரவுதற்கு உதவி புரிகின்றன.

**ஆரம்ப அறிகுறிகள்**

இந்நோயின் ஆரம்ப அறிகுறிகள் சருமத்திலும் நரம்பு முடிவுகளிலும் காணப்படும். சருமத்தில் ஓரிடத்திலோ அன்றிப் பல இடங்களிலோ நிறமாற்றமும் அணுச்செறிவும் காணப்படலாம். இந்நோய்க்கிருமிகள் நரம்புகளின்முடிச்சுகளுட் சென்றவுடன் அந்நரம்புகள் ஊட்டங்கொடுக்கும் சருமப் பகுதிகள் நிறம் மாறியும் உணர்ச்சியற்றும் காணப்படலாம்.

இந்த ஆரம்ப கட்டத்தில் நோயைக் கண்டுபிடித்து அதற்குத் தகுதியான சிகிச்சை பெற்றுக்கொள்வதால், இந்நோயைச் சுலபத்தில் கட்டுப்படுத்த முடிகிறது.

**ஆரம்பத்தில் வெளிப்படுத்துவதனுல் நேரகாலத்தோடு குணமடையலாம்**

ஆரம்பகாலத்தில் இந்நோயை வெளிபடுத்தத் தவறும் ஒருவருக்கு அல்லது இந்நோய்க்குத் தகுந்த சிகிச்சை பெறத்தவறும் ஒருவருக்கு இந்நோய் உடலெல்லாம் பரவுவதுமட்டுமல்லாமல், ஏனையோருக்கும் இந்நோயைப் பரப்புவதற்கு இவர் காரணமாக விளங்குகிறார். உணர்ச்சி நரம்புகள் தாக்கப்படும்போது நோயாளியின் கைகளிலும் பாதங்களிலும் உணர்ச்சியில்லாமல் போய்விடும். காலக்கிரமத்தில் அங்கபங்கம் ஏற்பட்டு இவர்கள் தம் நாளந்த வேலைகளைச் செய்யமுடியாமற் போய்விடும்.

குட்டரோகமென்று கண்டுபிடிக்கப்பட்டவுடன் கிரமமான, போதியசிகிச்சை பெறவேண்டியது அவசியமாகிறது. ஒருவர் தனது நோயின் அறிகுறிகளில் ஏதாவது சந்தேகமேற்பட்டால் உடனே ஒரு கைதேர்ந்த வைத்தியரிடம் தன்னைக் காட்டிப் பரிசோதிப்பித்துத் தனது சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

குட்டரோகமானது, ஆரம்பகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியான,போதிய கிரமமான சிகிச்சையளிக்கப்படும் பட்சத்தில், ஒரு குணப்படுத்தக்கூடிய நோயாகும்.

"ஆரம்ப காலத்தில் கண்டுபிடிப்பதனுல தொடக்கத்திலேயே குணப்படுத்தலாம்" என்னும் முதுமொழிக்கு, ஏனைய நோய்களைப் போல குட்டரோகமும் அடங்கும். இதனை ஒவ்வொருவரும் மனத்திற் கொள்ள வேண்டும்.

**பாலர்களுக்கு இலகுவில் தொற்றுகிறது**

ஏனைய தொற்று நோய்களைப்போலவே இந்நோயும் பெரியவர்களைவிடச் சிறியவர்களுக்கே அதிகமாகத் தொற்றுகிறது. புதிய நோயாளிகளைக் கண்டுபிடிக்க நடந்த ஒரு பரிசோதனையில், குழந்தைப் பராயத்தில் தொற்று ஏற்பட்டும், அதன் அறிகுறிகள் சில காலத்துக்குப் பிறகே காணப்படுகின்றன என்பது புலனுயிற்று.

குழந்தைகளுக்கு இந்நோய் தொற்றுவதைத் தடைசெய்தால், இந்நோயைக் கட்டுப்படுத்த முடியுமென்று இவ்வையகத்திலுள்ள குட்டரோக வைத்திய நிபுணர்கள் கருதுகிறார்கள்.

குட்டரோகத்தினுல் பீடிக்கப்பட்ட ஒருவர் வசிக்கும் வீட்டிலுள்ள குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படும் எனக்கருதப்படும் பட்சத்தில், நோயாளியையோ அல்லது குழந்தைகளையோ அவ்வீட்டைவிட்டு வெளியேற்றுவது, இந்நோய் பரவாமற்றடைசெய்வதற்குப் பெரிதும் உதவி புரிகிறது.

**குட்டரோகத்தைத் தடைசெய்தால்**

இந்நோய் பரவாமற் றடை செய்வது இலகுவானதால், பின்வரும் தடைமுறைகள் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றன.

(அ) முக்கியமாக, தொற்றுநதன்மையுள்ள இந்நோயாளியொருவரை,நோய் பரவாமற்றடை செய்யும்பொருட்டு ஏனைய ஆரோக்கியசாலிகளிடமிருந்து பிரித்துத் தனிமையில் வைத்திருத்தல்.

(ஆ) குட்டரோகத்தாற் பீடிக்கப்பட்டவர்களெனக் கருதப்படுபவர்களுக்குப் போதுமான சிறந்த சிகிச்சையளிப்பித்தல்.

(இ) புதிய நோயாளர்களை ஆரம்ப காலத்தில் கண்டுபிடித்துச் சிகிச்சையளிப்பித்தல்.

(ஈ) நோயாளிகளுடன் தொடர்புள்ளவர்களுக்குச் சிகிச்சையளிப்பித்தல்.

**பாதுகாப்பான முறைகள்**

நோய் பரவாமற்றடைசெய்வதற்கு, நோயை எதிர்க்கும் சக்தி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. நோய் தொற்றுவதை எதிர்க்கும் சக்திபெற பின்வருவன முக்கியமானவையாகும்.

(அ) பொருளாதார நிலைமையில் அபிவிருத்தி.

(ஆ) போதிய சத்துக்கள் அடங்கிய ஆகாரம்.

(இ) ஆரோக்கியமான வாழ்க்கை.

(ஈ) இடநெருக்கடியின்மை; விசேடமாக வீடுகளில்.

(உ) கயரோகப் பரீட்சையின்பின், குழந்தைகளுக்கு பீ. சீ. ஜீ. பால் குத்துதல்.

**நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்குக் கிடைக்கக்கூடிய வசதிகள்**

நோயின் அறிகுறிகளை ஆரம்பத்தில் கண்டுபிடித்து உடனடியான, போதிய, கிரமமான சிகிச்சை பெற்றுல் பூரண குணமடைவதற்கு வழிகளுண்டு என்பதை யாவரும் ஞாபகத்திற் கொண்டிருத்தல் அவசியமாகிறது.

குட்டரோகத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மூன்று விசேட தாபனங்கள் உள்ளன. அவை :

(அ) குட்டரோக ஆசுப்பத்திரி, ஹெந்தலை-வத்தளை. இது மேல்மாகாணத்தில் கொழும்பிலிருந்து 7 மைல் தூரத்தில் உள்ளது.

(ஆ) குட்டரோக ஆசுப்பத்திரி, மாந்தீவு, மட்டக்களப்பு-கீழ் மாகாணத்திலுள்ளது.

(இ) குடியேற்றத்திட்ட சௌக்கியப் பகுதி, ஹகஸ்மன்ஹன்டிய-தென் மாகாணத்தில் கொஸ்கொடையிலிருந்து ஐந் மைல் தூரத்திலுள்ளது.

குட்டரோகத்துக்கான சிகிச்சைகள், சகல உள்ளூர் ஆசுப்பத்திரிகளிலும், மருந்துச்சாலைகளிலும் சௌக்கிய காரியாலயங்களிலும் அளிக்கப்படுகின்றன. அத்துடன் போதனைகளும் கிடைக்கின்றன.

மேற்கூறிய சிகிச்சா நிலையங்களுக்குப் போய் சிகிச்சை பெற முடியாமல் இருக்கும் நோயாளர்களுக்கு, அவரவர் வீடுகளிலேயே வைத்து சிகிச்சையளிக்கிறார்கள் பொதுச் சௌக்கிய பரிசோதகர்கள்.

கொழும்பு 10, டி சேரம் பிளேசில் உள்ள விசேட குட்டரோக சிகிச்சா நிலயம், வெளியூர்களிலிருந்து அனுப்பப்படும் நோயாளிகளையும், கொழும்பிலும் அதன் சுற்றுடலிலும் இருந்து வரும் நோயாளிகளையும் பரிசோதித்து சிகிச்சையளிக்கும் இல்லமாக விளங்குகிறது. நோயாளிகளுடன் நெருங்கிப் பழகுபவர்களையும் இங்கு சோதிக்கப்படுகின்றது. குட்டரோக தாபனங்களில் அனுமதிக்கப்படும் சகல நோயாளிகளும் இச்சிகிச்சா நிலயத்தின் மூலமாகவே அனுப்பப்படுகிறார்கள்.

தனது வீட்டில், வைத்துத் தன்னைப் பரிசோதிக்கப்படவிரும்பாத ஒருவர், உள்ளூர் ஆசுப்பத்திரி, மருந்துச்சாலை, சௌக்கிய காரியாலயம் அல்லது கொழும்பிலுள்ள மத்திய குட்டரோக சிகிச்சா நிலயம் ஆகியவற்றுள் ஒரு இடத்தில் முன்கூட்டியே ஒழுங்கு செய்து, தன்னைப் பரிசோதனை செய்வித்துக் கொள்ளலாம்.

கொழும்பு, டி சேரம் பிளேசிலுள்ள மத்திய குட்டரோக சிகிச்சா நிலயம், விடுமுறை நாட்க(ஞாயிற்றுக்கிழமைகளும் பொது விடுமுறைத் தினங்களும்)ளைத் தவிர ஏனைய நாட்களில் திறந்திருக்கிறது. இங்கு, நோயாளர்களுடன் தொடர்பு கொண்டிருப்பவர்களைப் பரிசோதனைசெய்வதோடு மட்டுமல்லாமல், நோயின் அறிகுறிகளைக் கண்டுபிடித்து அதற்கேற்ற சிகிச்சையும் அளிக்கப்படுகிறது.

**நோயாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர்களுக்குச் சிகிச்சை**

**இதில் குழந்தைகளில் விசேட சிரத்தை**

நோயாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர்களுக்கு, நோய்பரவாமற்றடை செய்யும் பொருட்டு, அவர்களின் உடல் நிலையில் சிறிதளவு மாற்றங்காணப்பட்டாலும், ஐயமெழுந்தாலும் அதற்கு வேண்டிய பின்வரும் சிகிச்சையை, சௌக்கிய உத்தியோகத்தர்களும் பொதுச் சௌக்கிய பரிசோதகர்களும் தத்தம் பிரதேசங்களில், இவ்விலங்கை பூராகவும், அளிக்கிறார்கள். இக்குழுவில் செலுத்தப்படும் விசேட கவனம் புதுமையானது. இம்முறைகள் சரியானபடி கையாளப்பட்டால் போதிய பலன் கிடைக்கும்.

**தொற்றுந்தன்மையுள்ள நோயாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்பவர்களுக்குச் சிகிச்சை**

(அ) (1) மீன் எண்ணெய்.

(2) வருடத்துக்கு ஒரு தடவை அல்லது இரு தடவைகள் பூச்சி (கிருமி) புழு மருந்துச் சிகிச்சை.

(3) பால் ஊட்டும் மத்திய நிலையங்களிலிருந்தும் நலன்புரி நிலையங்களிலிருந்தும் பால்.

(4) டீ. டீ. எஸ் புரேபிலக்ரிக் டோஸ் மாத்திரைகள் (விழுங்குவது.)

(4 ம் பக்கம் பார்க்க)

---

- **குட்டரோகத்தைத் தடைசெய்வது, குடும்பம் சீரழிவது, சம்பாதிக்கும் தன்மையை இழப்பது, மனக்கிளர்ச்சி, கவலை ஆகியவற்றைப் போன்ற அதி பயங்கரமான சந்தர்ப்பமொன்றைத் தடை செய்வதைப் போன்றதாகும். சுருங்கச் சொன்னுல் இது கூடிய ஆரோக்கியமும் சிறந்த செல்வமும் என்பது கருத்தாகும்.**

- **சௌக்கிய சேவை உங்களுக்குப் பிரத்தியேகமான பாதுகாப்பு, உறுதி, வெகுமதி, மன அமைதி ஆகியவற்றை அளிக்கிறது. இவைகளை நீங்கள் நன்ருக உணர்ந்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பீர்களானுல் இவை யாவும் உங்களதே.**

- **குட்டரோகம் தடைசெய்யக்கூடியதும் குணப்படுத்தக் கூடியதுமான ஒரு வியாதியென்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். இதனைத் தடைசெய்வதற்கும் குணப்படுத்துவதற்கும் உள்ள ஒரு அரிய சந்தர்ப்பம், சௌக்கிய சேவைகளுக்கும் குட்டரோகத்தடை இயக்கத்துக்கும் நீங்கள் கொடுக்கும் மனப்பூர்வமான ஒத்துழைப்பைப் பொறுத்திருக்கிறது.**

- **உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் முன்வந்துள்ளோம். குட்டரோகத்தை நம் நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டுவதற்கு தயை கூர்ந்து எங்களுக்கு உதவி செய்யுங்கள்.**

# உணவு வர்த்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலுள்ள எங்கள் சமூகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரையும் ஒரே குடும்ப உறுப்பினராகவே கருதுகிறேம். உங்களின் மொழியிலேயே பேச முடியாமல் இருப்பதற்காக மிக வருந்துகிறேன். எனினும், நாங்கள் பொது மக்கள் அனைவரும் ஒரு மொழியை— இதய மொழியையே பேசுகிறேம். அற்ப விஷயங்களின்மீது சண்டையிட்டுக் கொள்ளும் பொழுதுபோக்கை, விடுமுறை மனப்பான்மையுடன் அரசியலுக்கு, வந்துள்ள அரசியல் வாதிகளும், அரசியல் கட்சிகளும் மேற்கொள்ளலாம். ஆனால் இலங்கையின் சாதாரண மக்களான நாங்கள் பாராளு மன்றத்திற்கு விடுதலை மனப்பான்மையுடன் வரவில்லை. சாதாரண மக்களின் உரிமைகளுக்காக, குறிப்பாக, பொருளாதார உரிமைகளுக்காகப் போராடவே வந்துள்ளோம். நகரங்களில், குறிப்பாக தலைநகரத்தில் எத்தனையோ ஸ்தாபனங்கள் இருக்கின்றன. எனினும் அவற்றினால் ஏற்படும் நலன்கள் கிராம மக்களுக்குக் கிட்டுவதில்லை. அதனாலேயே வங்கிகள், கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் போன்றவற்றைக் கிராமங்களுக்கும் கொண்டு வருகிறேம். ஒன்றுபட்ட இலங்கை, சுதந்திர இலங்கை, சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய இலங்கை-இம்மூன்றிற்குமே எங்கள் அரசாங்கம் பாடுபடுகிறது ஏகாதிபத்தியவாதிகள், பிரபுத்தவாதிகள், முதலாளித்துவ வாதிகள் ஆகியோரே நாங்கள் உருவாக்க முனையும் சமூகத்தின விரோதிகள். தேசிய செலவினத்திலும் பார்க்க தேசிய வருமானம் கூடுதலாக இருந்தால் நாடு என்ற முறையில் நாம் திருப்தி கொள்வோம். ஆயினும், சாதாரண மக்களின் பிரதிநிதிகள் அத்துடன் மாத்திரம் திருப்திப்பட்டுவிட மாட்டார்கள். தனிப்பட்ட ஒருவரின் வருமானம் அவரது தனிப்பட்ட செலவினத்திலும் பார்க்கக் கூடுதலாக இருந்தாலே நாங்கள் திருப்தியடைவோம். இதனை எய்துவதற்கு நாம் சமூக ஜனநாயகத்தை அனுசரிக்க வேண்டும். இந்தக் குறிக்கோளிற்காக நாங்கள் பல நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். பெரும் தொகையான பணம் இந்நாட்டை விட்டு வெளியேறுகிறது என்பதை அறிவோம். அப்பணம் எங்கள் நாட்டிலேயே மிகுதிப்படுத்தப்பட்டால், எங்கள் பொருளாதாரத்தைத் திருப்திகரமாகவும் வேகமாகவும் விருத்திசெய்ய முடியும். இதனை மனதிற் கொண்டே வங்கிகளைத் தேசியமயமாக்கியதுடன், இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனம், பெற்ரேல் கூட்டுத் தாபனம் ஆகியவற்றையும் நிறுவியுள்ளோம். விரைவில் கப்பல் கூட்டுத் தாபனம் ஒன்றும் நிறுவப்பட விருக்கிறது. இன்று திறக்கப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் கிளையும் இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றேயாகும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் இந்நாட்டின் நலனுக்காக இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகம் இரண்டையும் செய்கிறது.

### யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையின் சாரம்

விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் இலங்கையர் உலகப் புகழ் பெற்றவர்கள். எனது நண்பரான கல்வி அமைச்சருக்கும், எனக்கும் நீங்கள் அந்த உபகாரத்தைக் காட்டியுள்ளீர்கள். நாங்கள் இங்கு விருந்தினராக மாத்திரமன்றி, ஊழியர்களாகவும், நாட்டின் இப்பகுதியில் எங்கள் சேவைகளை நிறைவேற்றுதற்கு அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகவும் வந்துள்ளோம். உங்களுக்குப் பணியாற்றுவதற்கு மாத்திரமன்றி, உங்களின் பிரச்னைகளை அறிந்து நிவர்த்திப்பதற்கும் வாய்ப்பு அளித்தமைக்காக-யாழ்ப்பாண ஜனப் பிரதிநிதியை நான் பாராட்டியாக வேண்டும்.

சிறுபான்மை மகா சபை சமர்ப்பித்த குறைபாடுகளையும் கேட்க முடிந்தது. கீழ் நிலையில் உள்ள பல்வேறு பிரிவினர் எடுத்துக் கூறிய குறைபாடுகளையும் கேட்க முடிந்தது. நாங்கள் அவர்களிடமிருந்து கேட்டவற்றை இக் குடாநாட்டின் சில பகுதிகளின் ஜனப் பிரதிநிதிகள் எனப்படுவோரிடமிருந்து கேட்க முடியவில்லை சாதாரண மக்களின் நலனுக்காக நாங்கள் எத்தனையோ நிறுவனங்களைத் தொடக்கியுள்ளோம். கடந்த காலத்தில் கொடுத்துள்ளதைப் போன்று, எதிர்காலத்திலும் உங்களுக்கு நியாயமான அளவு தருவோம்.

# குட்டரோகம் பற்றிய.....

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

(5) கயரோக (மன்ரோ) பரீட்சையின்பின், குழந்தைகளுக்கு பீ. ஸீ. ஜீ. பால் குத்தல்.

**தொற்றுந்தன்மையற்ற நோயாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்பவர்களுக்குச் சிகிச்சை—**

(ஆ) (1) மீன் எண்ணெய்.
(2) பூச்சி மருந்துச்சிகிச்சை.
(3) பால் ஊட்டும் மத்திய நிலையங்களிலிருந்தும் நலன்புரி நிலையங்களிலிருந்தும் பால்.

**அங்கபங்கங்கள்**

இந்நோயைப்பற்றிய பயங்கர நினைவுகள் தோன்றுவதற்குக் காரணமாகவுள்ள அங்கபங்கங்கள் தடைசெய்யக் கூடியன. அத்துடன் தற்சமயம் கையாண்டுவரும் தேகாப்பியாச சிகிச்சா முறையாலும் புனர்சத்திர சிகிச்சா முறையாலும் அங்கபங்கங்கள் குணமாக்கப்பட்டு வருகின்றன.

**புனர் வாழ்வு**

ஹெந்தலையிலுள்ள குட்டரோக ஆஸ்பத்திரியில் இருக்கும் தொழிற்பயில் சிகிச்சா பிரிவினால், நோயாளிகளுக்கு சமூக, சரீர புனர்வாழ்வளிக்கும் விஷயம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தேகாப்பியாச சிகிச்சாமுறையும் புனர்சத்திர சிகிச்சாமுறையும், பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் கிடைத்தவுடன், ஹெந்தலையில் ஆரம்பிக்கப்படும்.

**விசேட புத்திமதி**

(1) நோயாளியோடு தொடர்புள்ளவரின் தேகத்தில் காணப்படும் சரும நிறமாற்றங்கள் சந்தேகத்துடன் சிகிச்சையளிக்கப்படுவதோடு உடன் நடவடிக்கையும் எடுக்கப்படவேண்டும். சரும நிறமாற்றங்கள், விசேடமாகக் குழந்தைகளுக்கு, புழுக்களினாலும் ஊட்டக் குறைவாலும், ஏற்படுகின்றன. ஆனால், இவை பூச்சி (கிருமி) புழு மருந்துச் சிகிச்சை, மீன் எண்ணெய், ஜீவசத்து (விட்டமின்) க்கள் ஆகியவற்றைக் கொடுப்பதனால் மறைந்துவிடுகின்றன. **குட்டரோகத்தினால் சருமத்தில் ஏற்படும் நிறமாற்றங்கள் ஒருபோதும் மறைந்து விடமாட்டாது எப்பொழுதும் இருந்து கொண்டேயிருக்கும்.**

ஆகவே, இந்நோய்த் தடைமுறையிலும் சிகிச்சா முறையிலும் கிடைத்துக் கொண்டிருக்கும் வசதிகளை சீரிய முறையில் உபயோகித்து முன்னேறினால் இந்நோயைக் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இதனை முற்றாக அழித்து விடவும் உதவியாக இருக்கும்.

(2) கைகளிலும் பாதங்களிலும் உணர்ச்சியற்று இருக்கும் நோயாளிகள், **தங்களுக்குக் காயங்கள், தீப்புண்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.** உணர்ச்சியுள்ள மக்களிலும் பார்க்க **இவர்களுக்குச் சுலபத்தில் காயங்கள் ஏற்படுகின்றன.**

(3) உணர்ச்சியற்ற கைகளுக்கும் பாதங்களுக்கும் கிரமமாக எண்ணெய் பூசி அழுத்துவதோடு குறிக்கப்பட்ட தேகாப்பியாசங்களையும் செய்யவேண்டும். ஒரு காயமிருந்து, **கைகால் விரல்களில் வீக்கம் காணப்பட்டால்,** அந்த உறுப்புக்கு ஓய்வு கொடுக்கவேண்டுமென்று கூறும் ஒரு எச்சரிக்கை அறிகுறியாகும். ஆகவே, அதன் பிறகு தேகாப்பியாசம் செய்யக் கூடாது.

**குட்டரோகத்தைக் கட்டுப்படுத்த நீங்கள் எவ்வாறு உதவிசெய்யலாம்.**

இந்நோயின் உண்மைகள், இதன் காரணகர்த்தா, இதன் ஆக்கிரமிப்பு (பரவுதல்), இவற்றின் தடைமுறைகள், சிகிச்சை ஆகியவற்றில் உங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பை நாங்கள் பெருமளவில் எதிர்பார்க்கிறேம்.

இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்குப் பொது ஜனங்களும், நோயாளிகளும் அவர்கள் குடும்பத்தவர்களும் பின்வரும் விதங்களில் உதவிசெய்யலாம் :—

(அ) குட்டரோகம் குணப்படுத்தக்கூடியது என்ற அறிவைப் பரவச் செய்தல்.

(ஆ) சந்தேகமான சரும நிறமாற்றங்கள் (புண்) காணப்படும் பேர்களை ஒரு வைத்திய உத்தியோகத்தரிடம் சென்று காட்டி, நோயைக் கண்டுபிடித்துதகுந்த சிகிச்சை பெறும்படி ஆலோசனை கூறுதல்.

(இ) ஏனைய நோய்களாற் பீடிக்கப்பட்டவர்களை நடாத்துவதுபோலவே குட்டரோகத்தாற் பீடிக்கப்பட்டவர்களையும் நடாத்துதல். இந்நோயாளிகளின் நிலையை உணர்ந்து அவர்களிடம் அன்பும் கருணையும் காட்டுதல்.

(ஈ) நோயாளிகளுடன் தொடர்பு கொண்டிருப்பவர்களை வருடத்துக்கொரு தடவை வைத்தியப் பரீட்சைக்குள்ளாகும்படி ஆலோசனை கூறல்.

(உ) அளிக்கப்படும் சிகிச்சை பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால் சிகிச்சையைக் கிரமமாகவும் போதியளவும் பெறவேண்டுமென்பதை உணரச் செய்தல்.

# வர்த்தக ஓவிய சங்கீத பாடங்கள்

பாடசாலைகளில் வர்த்தகம் சம்பந்தமான பாடங்களைப் பயில்வதற்கு ஏற்பட்டுவரும் ஆர்வத்தைச் சமாளிப்பதற்காக வர்த்தகக் கல்வியை விஸ்தரிப்பதற்கு கல்வி இலாக்கா ஒரு திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள பாடசாலைகளில் வர்த்தக பாடங்களில் தராதரம் பெற்ற ஆசிரியர்களில் 200 பேருக்கு மேற்பட்டோர் நியமனம் பெற்றுள்ளனர். சுமார் 80 பாடசாலைகளில் வர்த்தக பாடங்களும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

வர்த்தக பாடங்களில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் முதற்குழுவினர் மத்திய மகா வித்தியாலயங்களுக்கும், சிரேஷ்ட வித்தியாலயங்களுக்கும் நியமிக்கப்பட்டனர்.

இதே சமயத்தில் ஓவியம் போதிப்பதையும் கல்வி இலாக்கா வற்புறுத்தியுள்ளது. ஓவியப் பரிசோதகர்கள், ஓவியத்தில் முன்னர் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் உதவியுடன் வாரந்த ஓவிய வகுப்புக்களை மற்ற ஆசிரியர்களுக்காக நடத்தவும் வகைசெய்யப்பட்டுள்ளது. பயிற்சி பெற்றிராத வர்த்தகப் பாட ஆசிரியர்கள் சேவையில் இருந்து கொண்டே மூன்று குறுகியகாலப் பயிற்சி பெறுவதற்கும் இலாக்கா ஏற்பாடு செய்கிறது. ஓவிய குழுக்களும், ஓவிய நூல் நிலையம் ஒன்றும் நிறுவப்பட்ட பின்னர் ஓவிய ரசனை மேன்மேலும் வளர்ந்து வருகிறதெனக் கல்வி அதிகாரிகள் கருதுகின்றனர்.

சங்கீதம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவருகிறது. சங்கீதமும் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

சுதேச சங்கீதத்தை முறைப்படுத்திப் பயில்வதற்காக இந்தப்பாடப் பிரிவும் 1961 இல் பாடவிதானத்தில் சேர்க்கப்பட்டது. கிராமியப்பாடல், கிராமிய நடனம் முதலானவற்றுக்கான பாடத் திட்டமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

# நுட்ப விவசாயக் கருவிகள்

காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. ஸீ. பீ. டி சில்வாவின் சிபார்சின்படி, ஒவ்வொரு கருவிக்கும் ஒரு புஷல் நெல் என்ற அடிப்படையில் வரிசையில் நெல் விதைக்கும் கருவியும், களைபிடுங்கும் கருவியும் வழங்குவதெனஅரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன்படி, இக்கருவிகள் இரண்டுவருடகாலத்துக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் மூலம், விவசாயிகளிடையே வரிசையில் நெல் விதைக்கும் கருவிகளையும், களைபிடுங்கும் கருவிகளையும் பிரபல்யப்படுத்த உத்தேசிக்கப்படுகிறது. வெலிசறையில் உள்ள விவசாயப் பகுதியின் கருவித் தொழிற் சாலையில் இவை உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றின் விலைகள் வருமாறு :

| | ரூ ச. |
|---|---|
| வரிசையில் நெல் விதைக்கும் கருவி ஒன்று | .. 17 50 |
| களை பிடுங்கிகள் ஒன்று | .. 22 50 |

ஒரு வருடத்தில் விவசாயிகளுக்கு வரிசையில் நெல் நடும் கருவிகள் மூவாயிரமும், களை பிடுங்கிகள் மூவாயிரமும் வழங்கப்படும்.

இரசாயன உரத்தை உபயோகிக்க விவசாயிகள் பழகிக் கொண்ட இத்தருணத்தில் சிறந்த விவசாய முறைகளையும் புகுத்துதல் நல்லது என்பதனாலேயே அமைச்சர் இச்சிபார்சினைச் செய்துள்ளார்.

விவசாயப் பகுதி எடுத்துக் கொண்ட பல நடவடிக்கைகளின் பயனாக நெல் விளைவிப்போர் பலர் இரசாயன உர உபயோகத்தை மேற் கொண்டுள்ளனர். 1959/60 இல் உபயோகிக்கப்பட்ட உரத்திலும் பார்க்க 1960/61 இல் 10,000 தொன் அதிகமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. 1960/61 இல் உபயோகிக்கப்பட்ட அளவு 1961/62 இன் முதல் ஆறு மாதங்களிலேயே உபயோகிக்கப்பட்டுவிட்டது.

இரசாயன உரம் உபயோகிக்கும் போது இத்தகைய நுட்பமான கருவிகளையும் உபயோகித்தல் அவ்சியமாகிறது.

இலங்கை, வாழைச்சேனை சிலோன் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 6940—5,008 (1/63)